


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.6.2023) சென்னையில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023 நிறைவு விழாவில், சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் மூன்றாம் இடம் வென்ற ஜப்பான் அணிக்கு வெண்கலக் கோப்பையை வழங்கி வாழ்த்தினார். இவ்விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பு தலைவர் ஜீனா வூஸ்ட்ரிட்ஜ் (Zena Wooldridge), தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசன் மற்றும் சாம்பியன்ஷிப் கமிட்டி தலைவர் என்.இராமச்சந்திரன், தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.06.2023) சென்னை அண்ணா அறிவாலயத்தில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி சென்னை தெற்கு மாவட்ட திமுக சார்பில் தயாரிக்கப்பட்ட ”கலைஞர் 100 பாடல்கள் என்ற குறுந்தகட்டினை வெளியிட்டார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் பா. விஜய், இசையமைப்பாளர் பரத்பாஜ், பாடலாசிரியர் விவேகா ஆகியோர் உள்ளனர்.

### ஆகஸ்டில் சென்னையில் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் - மாமல்லபுரத்தில் உலக சர்ஃபிங் லீக் போட்டிகள்

# தமிழ்நாடு பன்னாட்டு விளையாட்டு இடமாக உருவெடுத்துள்ளது!

## சர்வதேச ஸ்குவாஷ் போட்டி நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூன் 17 –**

**சென்னையில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டி நிறைவு விழாவில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆகஸ்டு மாதத்தில் சென்னையில் ஆசிய ஹாக்கி சாம்பியன் ஷிப்பையும், மாமல்லபுரத்தில் உலக சர்ஃபிங் லீக்கையும் நடத்த உள்ளதாகக் குறிப்பிட்டு, தமிழ்நாடு பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளுக்கான விருப்பமான இடமாக உருவெடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.6.2023) சென்னையில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023 நிறைவு விழாவில், சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, இந்த ஸ்குவாஷ் உலகக் கோப்பையை நடத்திய அனைவருக்கும் முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டு வீரர்களிடையே கவனத்தை ஈர்க்கக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு அமைய இது காரணமாக அமையும்.

**தமிழ்நாட்டுக்குக் கிடைத்தப் பெருமை!**

கடந்த ஆண்டு உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி தமிழ்நாட்டில் நடந்தது. அதன்மூலமாக, தமிழ்நாடு உலகப் புகழ் அடைந்தது. உலக சதுரங்க ஒலிம்பியாட் போட்டியானது அதற்கு முன்பு இந்தியாவில் நடந்ததே இல்லை. முதன் முதலாக அதுவும் தமிழ்நாட்டில் நடந்தது. அது நமக்குக் கிடைத்த மிகப்பெரும் பெருமை.

செஸ் ஒலிம்பியாட் போட்டி நடத்த திட்டமிட்ட உடனேயே அதற்காக 102 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

இதுபோன்ற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு குறைந்தபட்சம் 18 மாதங்கள் ஆகும் என்பார்கள். ஆனால் நான்கே மாதங்களில் பன்னாட்டுப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செய்தது. உலகமே வியக்கும் அளவுக்கு போட்டியையும் நாம் நடத்திக் காட்டினோம்.

தமிழ்நாட்டில் தாங்கள் எப்படி அன்போடும், மரியாதையுடனும் கவனிக்கப் பட்டோம் என்பதை உலக செஸ் விளையாட்டு வீரர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்தார்கள். இதனை விட எங்களுக்கு வேறு பெரிய பாராட்டு நிச்சயமாக இருக்க முடியாது.

**இதுபோன்ற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு குறைந்தபட்சம் 18 மாதங்கள் ஆகும் என்பார்கள். ஆனால் நான்கே மாதங்களில் பன்னாட்டுப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செய்தது. உலகமே வியக்கும் அளவுக்கு போட்டியையும் நாம் நடத்திக் காட்டினோம்.**

அத்தகைய கவனத்துடனும் பொறுப்புணர்வுடனும்தான், இப்போதும் இந்த ஸ்குவாஷ் உலகக் கோப்பை அரசு ஒத்துழைப்புடன் நடைபெற்றுள்ளன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்கள், இது போன்ற போட்டிகளை தனிப்பட்ட சம்மேளனங்கள் நடத்தும் போட்டிகளாக அல்லாமல் அரசு நடத்தும் போட்டிகளைப் போலவே உதவிகளை செய்து வருகிறார்.

**அதிகாரிகளுக்குப் பாராட்டு!**

விளையாட்டுத் துறையின் கேப்டனாக இருந்து அனைத்து வகை விளையாட்டு வீரர்களையும் சாம்பியன்களாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவருக்கும் அவரது துறையைச் சார்ந்த உயரதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உலகின் முன்னணி ஸ்குவாஷ் வீரர்கள் கலந்துகொவண்டுள்ள இந்த ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டியில், இந்திய அணியில் 4 வீரர்களில் 3 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும், அவர்கள் சென்னையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அகாடமியில் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்தால் பயிற்சி பெற்றவர்கள் என்பதும் பெருமைக்குரிய ஒன்று.

நமது மாநிலம் தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்களில் 80 நபர்களைக் கொண்டு பலம் பெற்றுள்ளது. நமது மாநிலத்தில் ஸ்குவாஷ் துறையில் 5 அர்ஜுனா விருது பெற்றவர்களும், பத்மஸ்ரீ விருது பெற்ற ஒருவரும் உள்ளனர்.

நம் மாநிலத்தின் முன்னணி ஸ்குவாஷ் வீரர்களான ஜோஷ்னா சின்னப்பா, தீபிகா பல்லிக்கல், சவுரவ் கோஷல் மற்றும் அபய் சிங் ஆகியோர் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்களுக்கு மிகுந்த ஊக்கமளிப்பவர்களாக உள்ளனர்.

ஒருபுறம் துவக்க நிலையில் உள்ள விளையாட்டு வீரர்களையும், மறுபுறத்தில் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களையும் ஊக்குவிக்க நமது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**தமிழ்நாட்டில் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள்!**

- செஸ் ஒலிம்பியாட் போட்டியை வெற்றிகரமாக முடித்த பிறகு, பன்னாட்டு விளையாட்டுகள் மற்றும் போட்டிகளுக்கான விருப்பமான இடமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.
- ஆகஸ்ட் மாதத்தில் சென்னையில் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப்பையும், மாமல்லபுரத்தில் உலக சர்ஃபிங் லீக்கையும் நம் மாநிலம் நடத்தவுள்ளது.

### விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்குப் பாராட்டு!

- கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி - 2023, நமது மாநிலத்தில் நடைபெற உள்ளது என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்தில் அறிவித்து இருந்தார். இந்தப் போட்டிகளில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்னைகள் பங்கேற்க உள்ளனர்.
- விளையாட்டு உள்கட்டமைப்பில் அரசு அதிநவீன வசதிகளை உருவாக்கி வருகிறது.

ஒரு விளையாட்டு வீரர், தனது திறமையைக் காட்டி வெற்றி பெற எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் ‘Tamil Nadu Champions Foundation’ என்கிற அறக்கட்டளையை சமீபத்தில் தொடங்கினோம்.

ஸ்குவாஷ் உலகக்கோப்பை 2023 போட்டியை சென்னையில் நடத்துவதற்கு இந்திய ஸ்குவாஷ் ராக்கெட் சங்கம் எடுத்த முயற்சிகளை மீண்டும் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, சர்வதேச ஸ்குவாஷ் சம்மேளத்தின் தலைவர் ஜீனா உட்ரிட்ஜுக்கு (Zena Woodridge) நான் தனிப்பட்ட முறையில் நன்றி கூறுகிறேன். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் என்.ராமச்சந்திரன் அவர்கள் நமது மாநிலத்தில் விளையாட்டை மேம்படுத்தும் பணியில் முக்கிய பங்காற்றுகிறார்.

இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக நாடு முழுவதிலுமிருந்து வந்திருக்கும் அனைத்து வீரர்களுக்கும் எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போட்டிகளில் வெற்றி வாகை சூடிய வீரர், வீராங்கனைகளுக்கும், விளையாட்டு மேலாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டு வீரர்களே, வீராங்கனைகளே!

வெற்றி ஒன்றே இலக்காகக் கொண்டு விளையாடுங்கள்!

நீங்கள் அடையும் வெற்றி என்பது நீங்கள் பிறந்த நாடு அடையும் வெற்றி!

நீங்கள் சார்ந்த நாடு அடையும் வெற்றி! எனவே, உங்களது கடமையும் பெரிது, பொறுப்பும் பெரிது. உங்களது திறமையும் பெரிது.

அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# சர்வதேச ஸ்குவாஷ் போட்டி நிறைவு விழா!

## வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோப்பைகள் - பரிசுத் தொகை வழங்கினார்!

**சென்னை, ஜூன் 18–**

**சென்னையில் நடைபெற்ற 2023 சர்வதேச ஸ்குவாஷ் போட்டியின் நிறைவு விழாவில் வெற்றி பெற்ற அணிகளின் வீரர், வீராங்கனைகளுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுத் தொகை –தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.6.2023) சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டி - 2023 நிறைவு விழாவில், சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் முதல் இடம் வென்ற எகிப்து அணிக்கு தங்க கோப்பையும், இரண்டாம் இடம் வென்ற மலேசியா அணிக்கு வெள்ளி கோப்பையும், மூன்றாம் இடத்தை வென்ற இந்தியா மற்றும் ஜப்பான் அணிகளுக்கு வெண்கல கோப்பையும் வழங்கி வாழ்த்தினார்.

மேலும், சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023-ல் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல கோப்பைகளை வென்ற அணிகளின் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதக்கங்கள் அணிவித்து வாழ்த்தினார்.

**அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்புகள்!**

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை அனைவரும் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்தியது, மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்று ஏற்படுத்திட “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சர்வதேச ஸ்குவாஷ் போட்டி - 2023 சிறப்பாக நடத்திடும் வகையில் தமிழ்நாடு அரசால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் 12.06.2023 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டிகளை தொடங்கி வைத்தார். இச்சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 13.06.2023 முதல் 17.06.2023 வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில், இந்தியா, ஹாங்காங் - சீனா, ஜப்பான், மலேசியா, எகிப்து, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கொலம்பியா ஆகிய 8 நாடுகளைச் சேர்ந்த 32 தலைசிறந்த ஸ்குவாஷ் வீரர்கள் பங்கேற்றனர். இந்திய அணியில் ஜோஷ்னா சின்னப்பா, தன்வி கன்னா சவுரவ் கோசல் மற்றும் அபய் சிங் ஆகிய முன்னணி வீரர்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டியானது 12 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் நடத்தப்படுவது சிறப்புக்குரியது.

இந்தப் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக 2 கோடி ரூபாய் நிதி தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023 சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் முதல் இடம் வென்ற எகிப்து அணிக்கு சாம்பியன்ஷிப் தங்க கோப்பையும், பரிசுத் தொகையாக 10,000 அமெரிக்க டாலர்களும் (ரூ.8.20 இலட்சம்), இரண்டாம் இடத்தை வென்ற மலேசியா அணிக்கு வெள்ளி கோப்பையும், பரிசுத் தொகையாக 8,000 அமெரிக்க டாலர்களும் (ரூ.6.56 இலட்சம்), மூன்றாம் இடத்தை வென்ற இந்திய மற்றும் ஜப்பான் அணிகளுக்கு வெண்கல கோப்பைகளையும், பரிசுத் தொகையாக ஒவ்வொரு அணிக்கும் 6,000 அமெரிக்க டாலர்களும் (ரூ.4.92 இலட்சம்) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்து தெரிவித்தார்.

இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பு தலைவர் ஜீனா வூல்ட்ரிட்ஜ் (Zena Wooldridge), தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசன் மற்றும் சாம்பியன்ஷிப் கமிட்டி தலைவர் என். இராமச்சந்திரன், தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.